**இந்து சமய அறநிலையத் துறை**
**சென்னை – 600 034.**

இந்து சமய அறநிலையத் துறையில், நகைகள் மற்றும் விலையுயர்ந்தவற்றை சரிபார்க்கவும், மதிப்பிடவும் செயல்பட்டு வரும் நகை மதிப்பீட்டுக் குழுவில் (Verfication wing) இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் பதவியில் **6 (ஆறு) காலியிடங்களை** நிரப்புவதற்காக, இத்துறையின் இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள தகுதிகளைப் பெற்றுள்ள இந்து மதத்தைச் சார்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேற்கண்ட பதவிக்கான தகுதிகளையும் விண்ணப்பப் படிவத்தையும் www.**tnhrce**.org என்ற இணைய தள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஊதிய விகிதம் 9300–34800+4200 தர ஊதியம் மற்றும் விதிமுறைகளின்படி பெறக்கூடிய இதர படிகள். மேற்கண்ட காலியிடங்களில் **2(இரண்டு) காலியிடங்கள் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

பதிவிறக்கம் செய்து, முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை **"ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, எண் 119, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034** " என்ற முகவரிக்கு 27.10.2016 மாலை 05.45 மணிக்குள் கிடைக்கும்படி அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. குறிப்பிட்ட நாளுக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சென்னை – 34 ஆணையர்

## <u>இணையதளத்தில் வெளியிடப்படும் செய்திகள்</u>

இந்து சமய அறநிலையத் துறையில், நகைகள் மற்றும் விலையுயர்ந்தவற்றை சரிபார்க்கவும், மதிப்பிடவும் செயல்பட்டு வரும் நகை மதிப்பீட்டுக் குழுவில் (Verfication wing) இளநிலைத் தொழில்நுட்ப உதவியாளர் **பதவியில் 6 (ஆறு) காலியிடங்களை நிரப்புவதற்காகக், கீழ்க்கண்ட** தகுதிகளைப் பெற்றுள்ள, இந்து மதத்தைச் சார்ந்த விண்ணப்பதாரர்களிடமிரு ந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. (ஊதிய விகிதம் 9300–34800+4200 தர ஊதியம் மற்றும் விதிமுறைகளின்படி பெறக்கூடிய இதர படிகள்.) மேற்கண்ட காலியிடங்களில் **2(இரண்டு) காலியிடங்கள் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## <u>தகுதிகள்</u>

1. விண்ணப்பதாரர் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைச் சட்ட விதிகளின்படி **இந்து மதத்தைச் சார்ந்தவராக** இருக்கவேண்டும்.
2. பொதுக்கல்வி பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.
3. **2016 ஜூலை முதல் நாளின்படி 28 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு** மிகாமலும் இருக்கவேண்டும்.
4. தங்கம் மற்றும் வெள்ளி நகைகள், வெள்ளி, தாமிரம் போன்ற உலோகத் தகடுகள் மீது தங்கமுலாம் பூசுதல் மற்றும் இதர மதிப்புடைய பொருள்கள் பற்றி நுட்பமான தொழில் அனுபவம் பெற்றிருத்தலோடு இரத்தினம், வைரங்கள் போன்றவற்றின் தரத்தினை அறியும் திறம் பெற்றிருத்தலும் வேண்டும்.
5. பொற்கொல்லர் தொழிலில் 5 ஆண்டு அனுபவமும், விநியோகஸ்தராக அல்லது வர்த்தகராக 5 ஆண்டுகள் அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.
6. தங்கம் மற்றும் வெள்ளி வாகனங்கள் செய்தல், தெய்வத் திருமேனிகளுக்குத் தங்கம், வெள்ளி முதலான கவசங்கள் செய்தல், பஞ்சலோகம் முதலிய உலோகத்திருமேனிகள் குறித்தான அனுபவம் பெற்றவராக இருப்பது விரும்பத்தக்க தகுதியாகக் கொள்ளப்படும்.
7. இரத்தினம் பற்றிய முழு விவரங்கள், மதிப்புமிக்க அணிகலன்கள், தங்கம், வெள்ளியினால் செய்யப்படும் வாகனங்கள் மற்றும் இதர இனங்களை மதிப்பிடுதலும், அவற்றிற்கான மதிப்பீட்டுப் பட்டியலைத் தயாரிக்கும் திறமையையும் பெற்றிருத்தல் வேண்டும்.

   **(விண்ணப்பதாரர் நேர்முகத் தேர்விற்கு அறிவிக்கப்படும் நாளில் மேற்குறிப்பிட்ட முகவரிக்குத் தங்களின் சொந்த செலவில் வரவேண்டும்.)**

## <u>விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டியவை</u>

1. சென்னை வைர வணிகர்கள் மற்றும் அணிகலன்கள் வணிகர்கள் சங்கம் அல்லது புகழ் பெற்ற பிரபல இரத்தின வணிகர்களிடம் (குறைந்தது இரண்டு ) பட்டறிவு பெற்றதற்கான சான்றிதழின் படிகள் இணைக்கப்படவேண்டும்.
2. சான்றொப்பமிடப்பட்ட கல்வித்தகுதித் சான்றிதழ்களின் படிகள்.
3. நேர்முகத் தேர்வில் உண்மைச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
4. அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள், கல்வியாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் போன்ற எவரேனும் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றின் படியினை விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும்.
5. தற்போது பணியிலிருந்தால் அந்நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட தடையின்மைச்சான்றின் படியினை இணைக்கவேண்டும்.
6. திருக்கோவில் தொடர்பான பணிகளான ஆபரணங்கள், கவசங்கள், வாகனங்கள் முதலியன செய்தல் மற்றும் பழுதுபார்த்தல் போன்ற பணிகளில் தானாகவோ அல்லது ஏதேனும் ஒரு குழுவினருடனோ பணி செய்திருந்தால் அதற்கான முழுமையான விவரங்களும், அதற்கான சான்றின் படிகள்.

# இந்து சமய அறநிலையத்துறை

# இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்

# விண்ணப்பப் படிவம்

கடவுச்சீட்டு
அளவுள்ள
புகைப்படம்

1) பெயர் :

2) தந்தை பெயர் :

3) பாலினம் :

4) i) நிரந்தர முகவரி :

ii) அஞ்சல் தொடர்பிற்கான முகவரி :

5) பிறந்த தேதி :

6) இனம் மற்றும் வகுப்பு விவரம் (பிற்படுத்தப்பட்ட/ மிகவும் பிற்படுத்தப்பட்ட/ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்) :

7) மதம்/ இனம் :

8) கல்வித் தகுதி/ தொழில் நுட்பத் தகுதிகள் :

9) மரபு வழியாகப் பொற்கொல்லர் தொழிலில் ஈடுபட்டுள்ளாரா ? ஆம், எனில் எத்தனை ஆண்டுகள் :

10) 5 ஆண்டுகள் அனுபவம் பற்றிய விவரம் :

11) எழுதப் படிக்கத் தெரிந்த மொழிகள் :

12) வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா ? பதிவு எண், நிலை மற்றும் அலுவலகத்தின் முகவரி :

13) தற்போது பணியிலிருந்தால் அதன் விவரம் (துடையின்மைச் சான்று இணைக்கப்பட வேண்டும்) :

14) திருக்கோவில் தொடர்பான பணிகளான ஆபரணங்கள், கவசங்கள், வாகனங்கள் முதலியன செய்தல் மற்றும் பழுதுபார்த்தல் போன்ற பணிகளில் தானாகவோ அல்லது ஏதேனும் ஒரு குழுவினருடனோ பணி செய்திருந்தால், அதற்கான விவரங்கள். :

15) பிற குறிப்புகள் :

நாள்: **விண்ணப்பதாரரின் கையொப்பம்**

## இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் விவரம்

1)
2)

**பதிவிறக்கம் செய்து, முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் .27.10.2016 நாளுக்குப் பின்னர் பெறப்படின், அவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.**